பதினெண் சித்தர்களின் படைப்பே இந்துமதம்
விண்வெளியாரின் அருட்கொடையே இந்துமதம்
பதினெண் சித்தர்களின் தத்துவமே இந்துமதம்
இந்துமத எழுச்சியே இந்தியாவின் விழிச்சி
இந்தியாவின் விழிச்சியே இம்மானுட நல செழுச்சி
தமிழின் தாழ்ச்சியே தமிழின விழ்ச்சி
தமிழின விழ்ச்சியே இந்துமத விழ்ச்சி
தமிழுணர்ச்சியே இந்து மதச் செழுச்சி
தமிழே இந்தியப் பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும் உயிர்
தமிழே இந்திய வரலாற்றுக்கு வென்று, சான்று

---

அன்புடன் நன்கொடை வழங்கியவர்கள் :

**ஸ்ரீ வடிவேல் பிரிக் ஒர்க்கு**
உரிமையாளர் :- சித்தரடியான் மேலமடை பாண்டியன்
பேக்டரி : தச்சனேந்தல், வரிச்சியூர் (P O) மதுரை-20
அலுவலகம் : வடிவேல் நிலையம்,
42, சிவகங்கை ரோடு, மதுரை-20.

**சித்தரடியான் வேம்படியான் மணி**
10-J3, J3, ரோடு, நியூ எல்லிஸ் நகர், மதுரை-10.


**நா. சந்தர் B.Sc. ரோகிணி செராக்சு & போட்டோஸ்**
18/3, தந்தை பெரியார் மேம்பாலம், மதுரை-10.

---


கேதர்நாத் மதுரை-18. **விலை 0-50 பைசா**

# ஓர் இந்து மத விளக்கம்


சித்தர் காவிரியாற்றங்கரை [illegible]





ஞாலகுரு சித்தர் கருவூரார்


அருள்மிகு [illegible] சித்தர் [illegible]

இந்து மதமலர்ச்சி
இயக்கம்

தோற்றம் : கி.பி.1772

பதிவு எண் : 135/1983


அருள்மிகு சொல்லடி நாயனார்
பெரியார் ஈ. வெ. ரா.

# இந்து மதம் அழைக்கிறது

அக்டோபர் மாத இதழ்

**1983ல் [illegible] கிருபானந்தவாரியாரின்**
**[illegible] மறுப்பும் - விளக்கமும்**

---

வெளியீடு - 3
மதுரை இ. ம. இ. வின் அருள்மிகு நவநாத
சித்தர் [illegible] அருட்பணி மன்றம்
அருள்தாசபுரம், மதுரை-18.

# இந்து மதம் அழைக்கிறது

**அக்டோபர் மாத இதழ் - 1983**

## மறுப்பும் விளக்கமும்

**ஓர் இந்துமத விளக்கம்.**

### திருமுருக கிருபானந்தவாரியாருக்கு மறுப்பும் விளக்கமும்

1983 'இந்து மதம் அழைக்கிறது' அக்டோபர் மாத இதழில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் தமிழைப் பற்றியும் இந்துமதத்தைப் பற்றியும் தந்த தவருன கருத்துக்களுக்கு மறுப்பும் விளக்கமும்:-

**இந்துமதம் பற்றித் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் கூறியுள்ள தவருன கருத்துக்கு இந்து மறுமலர்ச்சி இயக்கத் தலைவர் என்ற முறையிலும், தமிழைத் தாழ்த்திக் கூறியதற்கு தமிழை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண் சித்தர்களின் வாரிசாக உள்ளயாம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர்பீடாதிபதி என்ற முறையிலும் தனித்தனிப் பதில்கள் வழங்குகிரேம். 'இந்துமதம் அழைக்கிறது' இதழின் ஆசிரியரின் விருப்பப்படி இவற்றை வெளியிடலாம். யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!**

''இந்து'' -என்ற சொல்லுக்கு பதில் பகர்கையில் கிருபானந்தவாரியார் அவர்கள் ஹிம்—தும் :-ஹிம்சைகளை அதாவது பிறரின் துன்பங்களைக் கண்டு—தும் அதாவது; துக்கப்படுகின்றவன்—இந்து ஆவான்.

நெடுநாள் சமயப்பணி ஆற்றும் பெரியவரே! இந்துமத வரலாறுகளையும், தத்துவங்களையும் ஆராயாமல் பாமரமக்களுக்கு காசுக்காகக் கதை சொல்லும் தொழிலாகவே சமயப் பணியைச் செய்துவருவது வருந்தத்தக்கது. இவரைப் போன்றோரின் சமயப்பயிற்சியோ! முயற்சியோ! முறையான ஞானமோ!... இல்லாதவர்களால்தான் இந்துமதம் இன்றுள்ள சிக்கலான நிலைகளை மறுப்புக்கும், வெறுப்புக்கும் எதிர்ப்புக்குமுரிய நிலைகளைப் பெற்றிட்டது.

இம் மண்ணுலம் தோன்றி ஐந்நூறு (500) கோடி ஆண்டுகளாகின்றன என்றும்; இதற்கு முன்னரே விண்வெளியில் உள்ள அண்டங்களிலும் பேரண்டங்களிலும் (Universe) பதினெண்சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட இந்துமதம் இருந்து வருகின்றது.

நெருப்பாக, பனியாக, நீராக முன்னூறு கோடியாண்டுகளும், கல்தோன்றி ஒருநூறு கோடியாண்டுகள் கழித்தே மண்ணும் உயிர்களும் (அருவங்களும்) பயிரினங்களும் உயிரினங்களும் (உருவங்களும்) தோன்றின. மனித இனம் தோன்றி மூன்று உகங்கள் முடிந்து நான்காவது உகம் நடக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1. | கிரேதாயுகம் | 1728080 | ஆண்டுகள் |
| 2. | திரேதாஉகம் | 1290000 | ஆண்டுகள் |
| 3. | துவாபரஉகம் | 864000 | ஆண்டுகள் |
| 4. | கலிஉகம் | 432000 | ஆண்டுகள் |
| | | 43,14,080 | ஆண்டுகள் |



இந்த உலகில் மண்தோன்றுமுன் கற்பாறைகள் மட்டுமே தோன்றியிருந்த காலத்தில் பதினெண்சித்தர்கள் எண்ணற்ற முறை இங்கு வந்து தங்கி ஆய்வுகள் நிகழ்த்தி இந்த உலகம் (48 இலட்சம்) நாற்பத்தெட்டு நூறாயிரம் ஆண்டுகள் கழித்து அழியும் என்று முடிவு செய்தனர். மானுட இனம் அழிந்த பிறகு இந்த உலகம் இருண்டு முழுமையாகச் சிதைய (ஐந்து இலட்சம்) ஐந்து நூறாயிரம் ஆண்டுகள் ஆகிடும். எனவே பதினெண் சித்தர்கள் இந்த உலக அருவங்கள், உருவங்கள், அருவுருவங்கள் அனைத்தும் உய்யும் பொருட்டு நாற்பத்தெட்டு எண்ணிக்கைகளைப் பெற்ற பல நிலைகளை உடைய இந்துமதத்தைத்தங்களின்தாய்மொழியான தமிழ்மொழியில் கலதோன்றி மண்தோன்றுக் காலத்திலேயே படைக்க ஆரம்பித்திட்டார்கள்.

(க) 'இந்து' என்ற சொல்லை விந்து, உயிரணு, உயிரின்கரு, உயிரின் ஆரம்பமும் முடிவும், ஒளி, ஒலி, வலிமை வளம், அழகு, இளமை, இனிமை, அன்பு, அமைதி, நிறைவு நிம்மதி, ஒற்றுமை, உறவு, உரிமை, பற்று, பாசம், நேர்மை வாய்மை, தூய்மை, மெய்மை, துய்ப்பு, பத்தி, சத்தி, சித்தி முத்தி, நிலைப்பேறு, பிறப்பிறப்பற்ற பெருநிலை, தவம் ஞானம் ... எனும் நாற்பத்தெட்டு வகையான பொருளுணர்வை குறிக்கும் சொல்லாகவே படைத்தனர். எனவேதான் இந்துமதம் உலக மானுட இனத்தைப் பண்படுத்திடும் வழியாய், வழிகாட்டியாய், வழித்துணையாய், வழிப்பயனாய் என்றென்றும் இருந்து வருகின்றது.

(உ) இந்த உலகை ஒன்பது கோள்களும்—பன்னிரண்டு இராசிகளும் — இருபத்தியேழு நட்சத்திரங்களும்

(விண்மீன்கள்)—48 எனும் நாற்பத்தெட்டு விண்ணுலகச் சத்திகளே ஆட்டிப் படைக்கின்றன. இவற்றிலிருந்து தப்பிக்கப் பரிகாரப் பூசைகளை விளக்குவதே இந்துமதம்.

(ங) விண்வெளியிலுள்ள 48 வகையான சத்திகளை மானுடர், தங்களுக்கு வசமாக்கி, துணையாக்கி, வாழ்வதற்குத் தேவையான 'அருள்' அணு ஊற்றுக்களைக் கண்டுபிடித்து நாற்பத்தெட்டு வகையான அமளிகை, அம்பலம், அரங்கம், கோயில், சபை, பாழி, பீடம், மன்றம், பூங்கோயில், பொதி-யில்.... என வழிபாட்டு நிலையங்களை நிறுவினார்கள்.

(ச) விண்வெளியில் நூற்றெட்டுத் திருப்பதி அண்டங்-களும், இருநூற்று நாற்பத்து மூன்று சத்தி அண்டங்களும், ஆயிரத்தெட்டு சிவ அண்டங்களும் இருப்பதால் அவைகளி-லிருந்து நாற்பத்தெட்டு வகையினரை மட்டும் தேர்ந்தெடுத்து மண்ணுலகத்தார் வழிபடுவதற்குரியவர்களாக்கினர் வழிபடு நிலை பெற்றோர், 'இறை ஆண்டவர், கடவுள், தெய்வம், பட்டவர், இருடி, தேவர், தேவதை.... எனும் நாற்பத்தெட்டு வகையினராயினர்.

(ரு) பதினெண் சித்தர்கள் இம்மண்ணுலகில் ஈசர்-களான மணீசர்களுடன் (சித்தர்களின் நூல்களில் 'மனிதர்' என்று 'ட'ண்ணகரம்தான் மனிதரைக்குறிக்கும் சொல்லில பயன்படுத்தப்படுகிறது.) உறவு கொண்டு வாழ்ந்து தங்களின் விந்துவழி வாரிசுகளையும், குருவழி வாரிசுகளையும், உருவாக்கினா. இந்த உறவு சுற்றங்களிலும், உரிமைச்சுற்றங்-களிலும், நாற்பத்தெட்டு வகையான சித்தர்களை உருவாக்-கினர். இந்த சித்தர்களே இந்துமதத்தை மானுடர் அனைவரும் துய்த்து உய்வுபெறும் வாய்ப்பு வகைகளை பெருக்கினர்



அவர்கள், 'நான்வேத சித்தர்கள், நான்மறை சித்தர்கள், நான்முறை சித்தர்கள், நானெறி சித்தர்கள், ஓக சித்தர்கள், ஓம சித்தர்கள்... என 48 வகைப்படுகின்றார்கள்.

(கூ) நாற்பத்தெட்டுவகைச் சித்தர்களும் செயல்படப் பதினெண்சித்தர்கள் நாற்பத்தெட்டு அருட்கலைகள், ஆயகலை கள் அறுபத்திநான்கு, பூசாவிதிகள், மீமாம்சைகள் நிட-தங்கள், இணை நிடதங்கள், நான்மறைகள், நான்முறைகள் நான் வேதங்கள், நானெறிகள், கருவாக்குகள், குருவாக்குகள் கருவாசகங்கள்.... என இந்துமத நூல்களை வழங்கினர்.

(எ) பதினெண் சித்தர்கள் படைத்த, 'நூல்கள்', 'அருட்கலைகள்' 48 வகைச் சித்தர்கள் எனும் மூவரும் முக்கோண பீடமாகி மணிசர்களுக்கு அருளை வழங்கினர். இதனால் அருளை முதிர்ச்சி பெற்றவர்களில் நாற்பத்தெட்டு வகையாக சன்னிதானங்கள், ஆதீனங்கள், பீடங்கள், மடங்கள், ஆச்சாரியார்கள், தம்பிரான்கள், தேசிகர்கள், அமளிகைகள், திருவடிகைகள், அருளாளிகள், பண்டாரங்கள்... அருளாளர்களென உருவாக்கப்பட்டனர்

இப்படிப் பதினெண் சித்தர்கள் அண்டப்போண்டங்கள் அனைத்தும் ஆளுகின்ற தொன்மைமிகு, பழமைமிகு, ஆதியந்த-மற்ற அமிழ்தத் தமிழில் மணிசர்களுக்காக இம்மண்ணுலக இயக்க நுட்ப ஆய்வுகளுக்கேற்பப் படைத்துக் கொடுத்ததே இந்துமதம்.

பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி அமராவதி-யாற்றங்கரைக் கருவூரருக்கு (கி, மு. 1ஆம் நூற்றாண்டு) சில நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியாவுக்கு ஆடு மாடு

மேய்க்கக் கோவணமும், கோலும், குடுவையுமாக வந்த ஆரியருக்குப் பதினென் சித்தர்களின் வாரிசுகள் தமிழ்மொழியை அடிப்படையாகக் கொண்டு செயற்கையாகச் செய்து கொடுத்த மொழியே 'சமசுக்கிருத மொழி' இம்மொழியில் விரைந்து தமிழிலிருந்த அருட் செல்வங்களை வழங்க முற்படும்போதே இது செத்து விட்டது. செத்துப் போன இதை இந்து மதத்துக்குப் பிடிவாதமாக ஆரியர் பயன் படுத்தியதாலேயே இந்துமதம் நலிந்தது.

எனவே, இந்தியாவில் சித்தர்களால் சமசுக்கிருத மொழி தோற்றுவிக்கப் படுமுன்னரே பல நூறுயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் இந்துமதம் பதினெண் சித்தர்களின் தாய்மொழியான தமிழ்மொழியில் படைக்கப்பட்டு விட்டது. எனவே இந்து மதத்துக்கும், ஆரியர்களுக்கும் எந்தவிதமானத் தொடர்புமே இல்லை. பதினெண் சித்தர்களின் வாரிசுகள்தான் சமசுகிருத மொழியைத் தோற்றுவித்தார்கள் என்றாலும் அது, பிறந்ததும் இறந்த குழந்தையைப் போல் செத்து போய்விட்டது. எனவேதான் சமசுக்கிருத மொழியைப் பயன் படுத்துபவர்களுக்கு எவ்வித அருளோ, சத்திகளோ சித்திகளோ கிட்டுவதில்லை.

இப்படி 'இந்து' என்ற சொல் 48 வகைப் பொருளை உட்கொண்டும், இந்துமதம் மேற்கண்ட அமைப்புக்களையும். முறைகளையும், கலைகளையும், நூல்களையும் கொண்டு வளர்க்கப் பட்டதுதானே அன்றி சமசுக்கிருத மொழியால் அல்ல; மேற் கண்ட அமைப்புகள் பற்றி விளக்கமோ சொல்வேறுபாடோ சமசுக்கிருதமொழியில் இல்லை என்பது தெளிவே. இதற்கான சான்றுகளும் ஊன்றுகளும் எம்மிடம் உள்ளன - என்ற பேருண்மையினைக் கிருபானந்தவாரியாரைப் போன்றவர்கள் உணர வேண்டும்.



விரிவஞ்சி இத்துடன் முடிக்கின்றோம்
'தமிழ் மொழிக்கு மந்திர ஆற்றல் உண்டு'
என்று விளக்கப்பதில் அடுத்து எழுதுவோம்.

## சிறப்புக் குறிப்பு:

சித்தர்களின் நூல்களிலிருந்து; நடைமுறைகளிலிருந்தும் திரட்டப்பட்ட கருத்துக்களால் உருவானதே இச்சிறப்புக் குறிப்பு.

அருளியவர்:- குருமகாசன்னிதானம் ஞாலகுருசித்தர்
கருவூரர்.

பதினெண் சித்தர்கள் இந்த உலகுக்கு கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலேயே பல ஆய்வுகளை நிகழ்த்த விண்வெளியிலிருந்து வந்தனர். அவர்கள், தங்களின் தாய்மொழியான தமிழ் மொழியில்தான் முதன் முதலில் பயிரினங்களும் உயிரினங்களும் உய்யும் பொருட்டு இந்துமதத்தைப் படைத்தனர். தமிழ்மொழியில் விண்ணையும் மண்ணையும் இணைத்துப் பயிரின உயிரின வாழ்வில் நலம் விளைவிக்கும் அருள் சார்ந்த கலைகளும் அறிவியல்களும் கணக்கற்றுப் படைக்கப்பட்டன. பிறகு, சித்தர்கள் தேவைகேற்ப உலகெங்கும் பல மொழிகளைப் படைத்துக் கொடுத்தனர் எனவே, 'எல்லா மொழிகளுமே மதத்துக்குரியவையே' 'எல்லா மொழிகளுமே பத்தி, சத்தி, சித்தி, முத்தி வழங்கக் கூடியவையே', எந்த ஒரு மொழியும் அருட்சத்தி இல்லாத மொழி அல்லது பூசைக்குப் பயன்படாத மொழி என்று கருதுவது தவறு .. என்பனவே பதினெண் சித்தர்களின் மொழிக் கொள்கை. அதாவது, ''எல்லா மொழிகளும் சமமானவையே_ சத்தானவையே! சித்திக்குரியவையே!'' -என்ற 'குருபாரம்! பரியவாசகமே' இது காறும் கூறியவற்றின் சுருக்க விளக்கம்.

இந்த உலகிலுள்ள எல்லா வழிபாட்டு நிலையங்களுக்குமுரிய
இடங்களைத் தேர்ந்தெடுத்து முறைப்படி அவற்றை 'அருள்
ஊற்றுக்களாக' அமைத்தவர்கள் பதினெண்சித்தர்களே!
எனவே ''அந்தந்த வழிபாட்டு நிலைய வட்டாரத்தில் பேசப்
படும்மொழியே 'பூசை மொழியாக', கருவறை மொழியாக'
'அருட்சினை மொழியாக', 'அருள் வழங்கு மொழியாக',
'கடவுளையும் மனிதனையும் இணைக்கும் மொழியாக',...
வல்லமையோடு விளங்கிடும் வண்ணமே பதினெண்-
சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், இவர்-
களின் விந்து வழி வாரிசுகளும் குருவழி வாரிசுகளும்
காலங்கள் தோறும் மொழிகளைப் படைத்துச் சமய-
நெறியைக் காத்து வருகிறார்கள், அனைத்து மொழிகளும
சமயங்களும் சித்தர் நெறி எனும் கனிமலர்ச் சோலையிலே
காய்த்தவைதான், பூத்தவைதான், மொழியாலோ, மதத்-
தாலோ! மனிதஇனம் வேறுபடலோ! மாறுபடலோ!
கூறுபடலோ! போரிட்டு மடிதலோ!... தவறு! தவறு!தவறு!
இம்மண்ணுலகில், 'சமத்துவ சகோதரத்தத்துவப் பொது
உடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' உருவாக்கவே சிததர்கள்
மொழியையும் மதத்தையும் படைத்தனர்...'' என்ற
'குருபாரம்பரிய வாசகம்' இங்கே குறிக்கப்படுவதுதான்
சிறப்பு.

**குருதேவர், தலைவர், ஞானத்தந்தை**
**குருமகா சன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**



# பதிப்பிப்போர் கருத்துரை

சித்தர்நெறி ஆர்வலர்களும், இ. ம. இ. உறுப்பினர்களும், அ.வி.தி. உறுப்பினர்களும் கிருபானந்தவாரியாரின் தவறான கருத்துக்குக் குருதேவர் வழங்கிய பதிலை எந்த ஏடும் வெளியிட முன்வராததால் இந்த அறிக்கையை அச்சிட்டு நாடெங்கும் வழங்க நேரிட்டது.

தமிழைத் தாழ்த்தியும், பழித்தும் கூறுகின்ற கிருபானந்த வாரியாரின் பேட்டியை வெளியிடத் தமிழில் ஏடுகள் இருக்கின்றன. ஆனால், தமிழின் உரிமையையும் பெருமையையும், பேராற்றலையும், பழம்பெரும் வரலாற்றையும்...மிகத் தெளிவாகச் சான்றுகளுடனும் ஊன்றுகளுடனும் எடுத்துக் கூறுகின்ற குருதேவரின் கருத்துக்களை வெளியிட நாளேடுகளோ! வார ஏடுகளோ! பிறபதிப்பகங்களோ!...முன்வரவில்லை என்பதால்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தினரும், அருட்பணி விரிவாக்கத் திட்டத்தினரும் சித்தர் நெறி ஆர்வலர்களும், ஆதரவாளர்களும் தமிழுக்கு ஏற்பட்டுள்ள பழிநிலையை, அழிநிலையை விளக்கிடப் பணியாற்ற முன்வந்துள்ளோம்.

தமிழுக்குத் தமிழகத்திலேயே இப்படிப்பட்ட 'இகழ்ச்சி நிலைகள்', 'தாழ்ச்சி நிலைகள்', 'வீழ்ச்சி நிலைகள்'... மிகுந்திருப்பதை உண்மையான தமிழ்ப் பற்றுள்ளவர்களாவது உணரவேண்டும்.

தன்னம்பிக்கையும் தன்மான உணர்வும் உடைய உண்மையான தமிழர்களே! விழிச்சி பெறுங்கள்! எழுச்சி பெறுங்கள்! தமிழ் காக்க எங்களோடு செயல்பட வாருங்கள்! வாருங்கள்! வாருங்கள்! என்ற அறை கூவலை இந்த அறிக்கை வாயிலாக விடுக்கின்றோம்.

அந்தந்த வட்டாரத்தார் வசதி வாய்ப்புக்களுக் கேற்ப இந்த அறிக்கையைச் சில ஆயிரம் நகல்களாவது அச்சடித்

துப் படித்தவர்க்கும் படிக்கின்றவர்க்கும் வழங்கிப் பைந்தமிழ் காக்கும் பணியினைச் சிறப்பியுங்கள். ஏனெனில்,....

''தமிழின் தாழ்ச்சியே தமிழின வீழ்ச்சி''
''தமிழின வீழ்ச்சியே இந்துமத வீழ்ச்சி'!
''தமிழுணர்ச்சியே இந்துமதச் செழுச்சி''
''தமிழே இந்தியப் பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும் உயிர்''
''தமிழே இந்திய வரலாற்றுக்கு ஊன்று, சான்று''

எனவே, 'தமிழனே தமிழைப் பழிக்கும் இழிநிலையை மாற்றப் போராடும் உணர்வு தழைக்க உழைப்போம்! வாரீர்! வாரீர்! வாரீர்! என்று வேண்டுகிறோம்.

தமிழைச் சொல்லியே வாழ்ந்த, வளர்ந்த, வளரும், வாழும் கழகங்களும், தனி மனிதர்களும் பிற அமைப்புகளும் இருக்கின்ற நமது செந்தமிழ் நாட்டில் யாருமே தமிழ் இழித்துரைக்கப்பட்டதற்குக் கொதித்து எழவில்லை. எவரும் பொறுப்பாகப் பதிலுரைக்கவில்லை - மேலும் ''தமிழ் வாழ்க! சைவம் வாழ்க!'' என்ற முழக்கத்தையே உள்ளீடாகக் கொண்ட சைவ மடங்களும் பீடங்களும் உள்ள தெய்வத் தமிழ்நாட்டில் யாருமே தமிழின் மானங் காக்க உரிமைக்குரல் எழுப்பவில்லை.

இந்த மோசமான, மோசடியான, நாசகாரக் காலக் கட்டத்தில்தான் இ ம. இ யும், அ. வி. தி. யும் சித்தர் நெறி ஆர்வலர்களும் ஆதரவாளர்களும் தமிழின் உரிமையையும் பெருமையையும் காக்க முன்வந்துள்ளனர் என்பதை இனியாவது தமிழகத்து மக்கள் புரிந்து சிந்தித்துச் செயல்பட வேண்டும் - என்ற வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

இங்ஙனம்,

**சித்தரடியான்கள் சித்தரடியாள்கள் சித்தரடியார்கள்**
**சித்தர்நெறி ஆர்வலர்கள்**
**சித்தர்நெறி ஆதரவாளர்கள்**



## தமிழ் மந்திரத்தால் உடல், உயிர்ப்பிணி போக்கும் அருள் நிலையங்கள் :

1) பதினெண் சித்தர் சிவசக்தி பீடம்
குருகுலம்
காரியேந்தல்பட்டி சித்தர் மாநகர்,
C/o. காதி வசுத்திராலயா, G.R.N.S.
கொட்டாம்பட்டி (வழி)
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்-625 103.

2) அருள்மிகு சிங்கம்புணரி சேவுகப் பெருமாள் சன்னிதானம்,
சித்தரடியான் மு. இராமானுசதாசு, (A.T.O.,G.I.T.I.,)
12, காந்திபுரம் V வீதி, வ.உ.சி ரோடு
காரைக்குடி-625 001.

3) அருள்மிகு ஆலவாய் மூதூர் (மதுரை)
தத்தனேரி சுடலைப் பத்திரகாளி சன்னிதானம்
சித்தரடியான் பெரி. முத்தையா,
14-A, பொன்னகரம் (4-)வது தெரு,
மதுரை-625 010.

4) அருள்மிகு ஆத்தாள் முப்புரம் கொண்டருளு தேவி ஆதிபராசக்தி ஆதீனம்,
சித்தரடியார் சோ. இரவீந்திரன்,
S/o. வ. சோமன் சேர்வை,
கீற்று, மூங்கில் வியாபாரம்,
இடமலைப்பட்டி புதூர், திருச்சி-620 012.

5) அருள்மிகு, நவநாத சித்தர் காரல் மார்க்சு அருட்பணி மன்றம்
பாப்பார முத்தையா சன்னிதானம் Dr. S.R நீலமேகம்
அருள்தாசுபுரம், மதுரை-625 018.

**தொடர்பு முகவரி :-**

1) அருட்பணி விரிவாக்கத் திட்டம்,
தலைமைச் செயலாளர், குருகுலம்,
அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம்,
சித்தரடியான் நெ. சேவுகன்,
C/o. காதி வசுத்திராலயா, G. R. N. S.
கொட்டாம்பட்டி, மேலூர் வட்டம்,
மதுரை மாவட்டம்-625 103.

2) அருள்மிகு அங்காள பரமேசுவரி சன்னிதானம்
சித்தரடியான் சி கவிக்குமார் B.Sc.
தலைமைப் பொறுப்பாளர்,
— அருட்பணி விரிவாக்கத் திட்டம்,
பொருளாளர், இந்து மறுமலர்ச்சி இயக்கம்
56, N. G. O நகர், பொன்னேரி-601 204.

3) குருதேவர், தலைவர், ஞானத்தந்தை,
குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரூர்,
E. S. I. டிஸ்பென்சரி, செம்பியம், பெரம்பூர்,
சென்னை - 600 011.

4) அருள்மிகு சௌடாம்பிகை அம்மன் சன்னிதானம்
சித்தரடியான் இரா. செ. வேங்கட்டரமணன் B.E.
TRAINEE, ENGINEER, B P. L. (India) Ltd.,
17th Km. Old Madras Road, Bangalore-560 049.

5) இந்து மறுமலர்ச்சி இயக்கம்
சென்னை மாவட்டத் தலைமைச் செயலகம்
தேவி கருமாரி அம்மன் சன்னிதானம்
ந. சண்முகம், 24, புத்தகரம் கிராமம்
இலட்சுமிபுரம் (P.O.) சென்னை-600 099: